உ

ஸ்ரீரெங்கசகாயம்.

சூடிகொடுத்த நாச்சியார்

என்னும்,

கோதை கல்யாணம்.

12 JUL 1919

ஆண்டாள் பரிணயக்கும்மி.

இவை

ஸ்ரீவில்லிபுத்தூர்

கனகவல்லி அம்மா அவர்களால்

இயற்றியது.

பெ. ஆறுமுக முதலியாரால்

சென்னை:

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

1919.

Q25:417.
N19
142240

749260

025:417
M49

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், சூடிகொடுத்தநாச்சியார் கோதைகல்யாணம் ஆண்டாள் பரிணயக் கும்மி என்னும் புத்தகத்தை வில்லிபுத்தூர் கனகவல்லி அம்மாளவர்களால் எழுதினதை பெ - ஆறுமுகமுதலியாராகிய எனக்கு சகல சுதந்திரம் கொடுத்துவிட்டபடியால் இதை என் அனுமதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதெனகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ-ஆறுமுக முதலியார்.

உ

ஸ்ரீரெங்க சகாயம்.

சூடிகொடுத்த நாச்சியார் என்னும்

கோதை கல்யாணம்.

ஆண்டாள் பரிணயக்கும்மி.

1-வது கட்டம்.

இராகம்-தெம்மாங்கு.

தெற்கு கடல்காட்டு மெட்டு.

ஆண்டாள்கல்யாணமதை அன்புடனே நான்பாட
வேண்டியேவேதாந்த தேசிகரைவணங்கினேனே
அடிமையாவேன் மறுரைகவிக்கி
அருமலர்பாதம் தொழுதுநின்றேன்
அய்யன்யெதிராஜன்சேவடி
மெய்யிலேயென்னேரஞ்சொல்வேன்

கும் மி.

பாரெங்கும்புகழும் சீரங்கமெனும்
பதியாம்வில்லி புத்தூர்தனிலே
தேரோங்கும்நாராயண தாசர்வளர்த்த
தேவியர்கோதை வனத்திற்குள்

உள்ளுரு வங்கணமே என்றமெட்டு.

நந்தவனந்தனிலே நல்லஆடிபூரமதில்
நாராயணதாசரவர் நருங்காலைவேளைவந்தார்

கும்மி.

உதயகாலத்தில் பதினாயிரங்கோடி
ஒளிசூரியனைப் போலே
உதிக்கதுளசி வனத்தில்குழந்தை
உருவத்தைகண்டு சந்தோஷியித்தார்

உள்ளுருவங்கமே மெட்டு.

கையினால்வாரியெடுத்து கணமுடன்வாழ்த்திமகிழ்ந்து
வையமீதுநாராயணதாசர் வந்தாரே தன்னுத்துக்கே

தெற்குகடல.

கண்மணிக்கியாசையுடன்
கட்டினார்தொட்டிலங்கு
பெண்மணிக்கி ஆண்டாளென
பேருமிட்டு தானழைத்தார்
தத்திதத்தி கோதையரும்
தான்நடந்து அன்னம்போல
உத்தமியும் பருவமதாய்
உகந்துமார்கழி நோம்புசெய்தாள்

கும் மி.

அச்சுதன்மாலை தந்தடைய
அருமையாய் பக்தர்தான்களிக்க
உச்சிதமாகவே சூடிகலந்தவள்
உற்றபேர்வைத்து மகிழ்ந்திருந்தாள்

உள்ளுருவங்கணமே.

சிரங்கநாதரை சேர்ந்துமாலையிட
சித்தத்தில்யெண்ணி ஆண்டாள் நித்தியம்நினைந்திருப்பாள்

---

12 JUL 1919
MADRAS

2-வது கட்டம்.

இராகம்-நோட்டு.

ராஜாத்திராஜனடி என்றமெட்டு.

1. சின்னசிறுயிடையாள் முன்னும்அன்னநடையாள்
கன்னியர்கள்தன்னுடனே பூங்காவில்ஆண்டாள்வந்தாள்

2. அந்திபொழுதினிலே மலர்அடர்ந்தசோலையிலே
வந்துசகிதன்னுடன் ஆண்டாள் பந்துகளாடிடவே

3. செங்கதிரைப்பழித்தாள் மிக்கசெழித்ததன்முகத்தாள்
நங்கையாண்டாள்சேடிவுடன்மலர்நந்தவனமுற்றாள்

4. சுந்தரநல்வனத்தைகண்டு சந்தோஷமிககொண்டாள்
விந்தையானயவ்வனத்தின்காக்ஷி விபரமும்விண்டாள்

3-வது கட்டம்.

இராகம்-இந்துஸ்தான்

சப்த்தலகபியாரிதோரி மெட்டு.

1. செண்பகம்முல்லையடி
செவந்திவேர்ரோஜாவடி
அன்புடன் அடுக்கறளி பார்பார்பார்
சேடியே கூர்யோடியே

2. கொழுந்துமல்லிகையடி
கோதையேபார்தாழையடி
கொன்னைபன்னீர்யடி பார்பார்பார்
கொஞ்சுதே மனம்மிஞ்சுதே

3. மனோரஞ்சிதமடி
மந்தாரைதுளசியடி
மல்லிகைஜாதிமலர் பார்பார்பார்
மாதரசேகேளிப்போதே

4. செங்கழனீர்யோடையடி
செந்தாமரையுமடி
சேயிழையே அல்லிமலர் பார்பார்பார்
செப்புவேன் நீயும்யொப்பவே

5. மன்மதபாணமடி
மகாபாரிஜாதமடி
மந்தாரைபுன்னையடி பார்பார்பார்
மாமல ருள்ள காவினில்

6. இந்துமுகியந்தரங்க
சொந்தசகியேநாமும்
பந்துவிளையாடவேணும் கேள்கேள்கேள் (செ)

4-வது கட்டம்.

இராகம்-இந்துஸ்தான்.

ஆயிலேசிமேபகா மெட்டு.

அனவருங்கூடி ஆண்டாளும்பந்தாடிநான் (சகிஅன)

1 அங்கும்இங்கும்விழ யெங்குமேயோடவே
சிங்காரவனந்தன்னில் ஆ ஆ (சகிஅன்)

2 வைய்த்தாள்பந்தயம் வாடியோடியென்றாள்-மன
தொத்துமிகயடித்தாள் ஆ ஆ (சகிஅன)

3. வாங்கியவள்பந்தை யோங்கியெறிந்தே
வனந்தனில்தான்மகிழ்ந்தே ஆ ஆ (சகிஅன)

4. கோடி சூரியனை நாடி மழுங்கசெய்யும்
கோதையரும்தாதியும் ஆ ஆ (சகிஅன)

5-வது கட்டம்.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கோடிபுண்ணியமுண்டடா மெட்டு.

அங்குதனித்துதானும் ஆண்டாளும்
தங்கியிருந்தனளே

1 எங்கும்நீரோடையுள்ள
சிங்காரமேடைமீது
திங்கள்வதனிசகி தன்னைதான்பிரிந்து (அங்)

2. நத்துபுலாக்கழகும்
முத்துசொருகழகும்
மெத்தவடிவுடனே பத்திமலர்சோலையிலே (அங்)

3. கம்மல்மூக்குத்திமின்ன
காதில்முருகுதுண்ண
கஸ்தூரிபொட்டுடனே காவில்தனிமேடையிலே ()

4. வங்கிதோடாகங்கணம்
வளையல்கையில்துண்ண
தங்ககொலுசுடனே தனியாய்மேடைமீது (அங்)

5. தங்கஒட்டியாணமும்
ரெங்கநாமஸ்மரணையும்
தண்டைசிலம்பொலிக்க தனியாய்சேடியைவிட்டு ()

6-வது கட்டம்.

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ஆதி.

மாமியேநானென்ன மெட்டு

ஸ்ரீறெங்கம் றெங்கநாதரும்
தேவிகோதையை தேடியேகாணவந்தார்

சரணம்.

1. அங்கு அறவ பள்ளிநீங்கினர்
மங்கையாண்டாளை மனதினில்நோக்கினர் (ஸ்ரீ)

2. கெருடன்மீதினில் யெழுந்தருளாமலே
கிட்டியசங்கு சக்கரமேந்தாமலே (ஸ்ரீ)

3. மறந்தனர் காதல்திருவே
மகிழுடன்வில்லிபுத் தூருக்குவரவே (ஸ்ரீ)

4. ஆண்டாளை பார்க்கவே
அதிவிரைவாய்பகரதியை யின்றப்பாதம்நிர்க்கவே (ஸ்ரீ)

7-வது கட்டம்.

இராகம்-கரப்பி-ரூபகதாளம்.

உடுமலைமுத்துசாமி பாட்டே மெட்டு.

1. காவேரிகொள்ளடமாலைறெங்கம் யதை
கண்டோர்பாபம்போக்கிதெறேகந்தங்கம் தான்
காணவே ஆண்டாளுவெகு
நாணமேயடைந்து ஆசை கொண்டாள்
பார்த்துநின்றாள்

2. இவர்வடிவைகண்டாலெந்தமாது கொஞ்ச
இச்சைகொள்ளாமலிருப்பதேது நான்
இப்படிஅறங்ககர்
அச்சுதன்மீதில் ஆசைத்தானே
கொண்டேனே

3. சுந்தரவடிவுடையோறெவ்வூரோ எனக்கு
சொல்லுவாரோயென்னயவர்பேரோ இங்கு
வந்துமோநந்தவனத்தில்
விந்தையாய்வுலாவுகிறார் ஆரோ
சொல்லுவாரோ

4. கொஞ்சுமொழிவாய்திறந்துதானே — முன்
கூறுவாள் ஆருவெனறெங்கனே — இந்த
வஞ்சியர்வசிக்கும்மலர்
ரஞ்சிதபூஞ்சோலைதன்னில் வந்தீர்
நின்றிருந்தீர்

8-வது கட்டம்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

ஆசியா ஆபிரிக்காலண்டன் மெட்டு.

1. வில்லிபுத்தூரில்வாழும்
வல்லி ஆண்டாள்சொல்குகந்து
பள்ளிகொண்டறெங்கனுமேநின்றனர் — ஜாதி
மல்லிகைவனமதில்விண்டனர்

2. பூரநட்சத்திரமாடி
மாதமதில்நீபிறந்தாய்
ஆரும்யீடில்லா அழகைகொண்டாய் — இந்த
பாருமேதுதிபெறவேநீகண்டாய்

3. ஆதிமூலம்மென்றுயானை
யோதியபொழுதேஓடி
அந்தகரிதன்னைகார்த்தமன்னண்டி — நான்
வந்தேனேவுந்தனைதேடி கண்ணண்டி

4. வேட்டைகளும்காட்டினிலே
பூட்டியேகணைகளோடு
வேண்டியேமானைத்தேடிவந்தேனே — என்
ஆண்டாளேமையல்கொண்டு கந்தனே

9-வது கட்டம்.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

ஆனைமுகவனே மெட்டு.

1. பெற்றெடுத்தார்பெரி யாழ்வார்பெண்மணிகோதை
உற்றயென்னையரியாயோ உத்தமிமாதேபெண்ணே

கேள்முன்னமே பிரியமுடன்தேடிவந்தேன்
பெரியகோவில் றெங்கனடி

2. பாவையேபட்டாபிரான் பார்த்துமகிழவுன்னை
கோவையிதழ்ஆண்டாளே கோபமோகிட்டேமுன்னே
பத்மினிசித்தினி பரிவாகதேடிவந்தேன்
பக்தர்புகழ் றெங்கனடி

3. அங்கமுழுதுதங்கநிற ஆண்டாளேயுந்தனிட
மங்களத்துடன்மாலைசூடும் மன்னவன்யந்தமுட
மங்கையேயிங்கயே மனதுயுன்மீதுவைத்த
மணாளனுன் றெங்கனடி

4. சூடிகொடுத்த நாச்சியாரேசொல்லுகிறேன்என்முகத்தை
வேடிக்கையாய்பார்க்கொண்ணுதோ விதவிதநல்லகத்தை
சொல்லினேன்வல்லியே சொந்தமுள்ளவருன
ஜோதிசிறங்கனடி

10-வது கட்டம்.

இராகம்-காவடிச்சிந்து.

ராமாயணசிந்து அருமை சீதையென மெட்டு.

அருமைபெருமையாண்டாள்மாதே நான்
அரிவிப்பதைகேளிப்போதே

1. பொருமைஅரிவுமுள்ள கண்ணே ஆ ஆ
சொன்னேகேள்பெண்ணே புகழ்
பொன்னரங்கராஜனடிமானே

2. பாடினாய்திருப்பாவைநீயே ஆ ஆ
மாதேமாதே பாசுறங்களுமிககோதே நான்
நாடிவந்தேனேமுன்னே

3. மையவிழியாள்மாதேயென்னேபாராய் ஆ ஆ
கோதேகோதே இப்போதே நான்
மையல்கொண்டுநிக்கிறேனே

4. சுந்தரவதியேகேள்கண்ணே ஆ ஆ
மாதுமாது சொல்வதுமுன்னே
சூடிகொடுத்துகந்தபெண்ணே

11-வது கட்டம்.

இராகம்-தெம்மாங்கு.

காப்பிகுடி தங்கமெட்டு.

1. பாறெங்குமேபுகழும் ஆண்டாளே தங்கம் வெகு
பாவலர் ஆழ்வார்மகிழும் ஆண்டாளே தங்கம்
சிறங்கம்தன்னகரும் ஆண்டாளே தங்கம் நாம்
சேர்ந்துபோவோம்நீவருவாய் ஆண்டாளே தங்கம்

2. இருபுறமும்காவேரியாம் ஆண்டாளே தங்கம் வெகுபேர்
இருக்கதகுந்தநகர் ஆண்டாளே தங்கம்
மருமலர்சோலையடி ஆண்டாளே தங்கம் யங்கு
மாடமாளிகைமதிலாம் ஆண்டாளே தங்கம்

3. ஆதியறவணையணம் ஆண்டாளே தங்கம் வெகு
அற்புதகாக்ஷியடி ஆண்டாளே தங்கம்
வேதவிமானமுண்டு ஆண்டாளே தங்கம் நல்ல
வேண்டுநீதிகள்யுண்டு ஆண்டாளே தங்கம்

4. சேர்ந்துசுகித்திருப்போம் ஆண்டாளே தங்கம் நம்
சிந்தைமகிழ்வதாக ஆண்டாளே தங்கம்
எந்தன்விரல்கோத்துகொள்ளுஆண்டாளே தங்கம் இருபேரும்
ஏகிடுவோம்சிரங்கமே ஆண்டாளே தங்கம்

12-வது கட்டம்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

ஆறுமுகவடிவேலவனே மெட்டு.

1. ஸ்ரீறெங்கநாதனேசேயிழைக்கிகலி
யாணமேசெய்யவில்லை-இந்த
பாரோர்அரியவேயென்னருகில்வந்துகையை
பற்றுதலேதொல்லை

2. விவாகம்செய்வதற்கு வேதவிதிப்படியொரு
விற்பனர்வேண்டாமா-யந்த

வேதியர்யன்றிக்ஷத்திரியர்போலமண
காந்தருவமாகுமா

3. விஷ்ணுசித்தர்யென்தந்தையரியாமல்
விரலைநீதொடலாமா
விஷயம்யரிந்துமே மன்மதவார்த்தையில்
யுள்ளத்தைவிடலாமா

4. சேடியர்கண்டுபெரியாசம்செய்வார்
சீக்கிரம்மறைந்துவிடும்-ஆடும்
செண்டுகள்பந்துகள் ஆடவருவாள்
சேதிதெரிந்துவிடும்

5. நாளும்பணிந்திடும்நாராயணசித்தர்
நாடுமெணிமார்பா-இப்போ
நானுனைதொழுதேன்சற்றேவிலகி
நாயகிதுயர்தீர்ப்பா

6. பெரியாழ்வார்யென்தந்தையிடம்நானும்சென்று
பெண்ணாளும்சொல்லுகிறேன்-ஸ்ரீ
அரிகரியேயுந்தசிந்தையென்மீது
யகலாமல்கொள்ளுகிறேன்

7. ஆசைமணவாளா அந்தரங்கமுள்ள
அறங்கநகர்வாசா-வெகு
பாசம்யுன்மேல்பாவையர்க்குமுண்டு
பாறளந்தறெங்கேசா

13-வது கட்டம்.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கோலாட்டப்பாட்டு மெட்டு.

1. கோரியறெங்கராஜர்யுறைத்தமொழி
கோதையர்சந்தோஷமாய்
வாரீர்கள்தோழியென்றுவகையுடன்சேர்ந்து
வண்மையாய்யாத்துகுள்சென்றாள்

2. அய்யாவெனவேதந்தைக்கியடிபணிந்து
அரிவித்தாள்மனதுள்ளதை
மெய்யர்முன்வெக்கமாய்மின்னே தலைகுனிந்த
மெல்லியையெதிரில்கண்டார்

3. கோதையர்யுள்ளமறிந்தார்பெரியாழ்வார்
குதோகுலமாகமகிழ்ந்தார்
மாதேயுந்தனைநானேமாயன்றெங்கநாதனுக்கு
மணம்செய்துவைப்பேன்யென்றார்

4. ஆண்டாள்தனைபுகழ்ந்தார்பெரியாழ்வார்
அம்மணியெனமகிழ்ந்தார்
காண்டாவனமெரித்தோன்தோழன்காவேரி
றெங்கனுக்குகலியாணம்செய்வேன்யென்றார்

5. மணவோலைதான்வரியநல்லதினம்
மகிழுடனேயரிய
மரியாதையுடன்வெகுதேசயரசருக்கு
மனுஷனை தூதுவிட்டார்

6. திருப்பதிநூற்றுயெட்டிலேயெழுந்த
திருமால்பெருமாளுக்கு
பொருப்புடனேகோதைதிருமணபத்திரிக்கை
போகவிட்டுமகிழ்ந்தார்

14-வது கட்டம்.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

நூலாபீஸ் மெட்டு.

பதினாயிரகண்கள்போருமோ பாவையர்கோதை
பாணிக்கிரஹகாக்ஷி சொல்லநேருமோ

1. பாருவிண்ணிலிருந்து தேவதச்சரும்
பலவிதமாய்பந்தல் தான்யமைத்தார்
தாருகதழியுடன்தொங்கிடவாழைமறம்
தட்டுதட்டாகுளோப்பர்யெட்டுதிசையும்தொங்க (பதி)

2. தேக்குகுலைதேங்காகுலை திவ்வியமானயந்த
பாக்குலைபணக்குலை பத்திபத்தியாக

மேற்குகிழக்கிலும் மேன்மையாய்தேருசேலே
பார்க்கமிகசெழிப்பாய் பண்பாய்கட்டிதொங்க (பதி)

3. கோபுரந்தன்னிலே தோரணம்யெங்கும்
கொத்துகொத்தாக தொங்கவிட்டு
ஆபரணம்பூண்டுசேடி பன்னீர்ஜலம்தெளித்து
அன்பாய்பலவிதகோல மிட்டார்கள் (பதி)

4. ஆயிரம்கணக்கான தானம்செய்தார்வெகுபேர்க்கு
அன்னதானமும் மிகவேசெய்தார்
சேயிழைதனக்கு மணம்செய்யபெரியாழ்வார்
செலவுசெய்தார் பூரிவெகுபேர்க்குதந்தார் (பதி)

5. வாத்தியம்முழங்கவே யடித்தார்தாசிகள்
வகைவகையாய் வந்துநடித்தார்
க்ஷேத்திரமிகுந்தநல்ல வில்லிபுத்தூரினில்
சிந்தித்துசந்தோஷ மடைந்தார் (பதி)

15-வது கட்டம்

இராகம்-பிலகரி-தாளம்-ஆதி.

ஆண்டவன்மித் மெட்டு.

1. கோதைவிவாககாட்சியைக்காணவே
கோடிகோடிஜனம்நிறைந்தார்
மாதர்கள் அந்தணர்பலரும்
மகிழ்ச்சிமிகவேகொண்டார்

2. ஆசையாய் அரசரும்திருப்பதிவாசரும்
அணபேரும்வில்லிபுத்தூர்வந்தார்
நேசமுடனேவேதியர்போலவே
வேசமும்போட்டுயுகந்தார்

3. அறங்கநகர்வாசன் அச்சுதன்மாலும்
அன்புடன்மையல்கொண்டு
தறங்கள் அரிந்து ஆண்டாளை மணம்செய்ய
தாமோதரனும்நின்று

4. மலர்துளபமாம்பறுசூடிகொடுத்தாள்மேல்
மையல்மிகவேகொண்டார்
அலர்தாமரைபாதம்ஆண்டாள்கல்யாணம்
அய்யன்யெண்ணியேநின்றார்

5 பூவைசூடிமகிழ்ந்தஅறங்கபெருமாளும்
பெண்மேலேஆசைவைத்தார்
பூறம்ஆடிமாதம்பிறந்தவள்யென்றுமே
பூமன்அறவில்படுத்தார்

6. காவேரிறெங்கனேகாணுமலேஆண்டாள்
கன்னிகையோடிருந்தாள்
கருத்தில்நினைந்ததையங்குநின்றுமே
களிப்புடனேபகர்ந்தாள்

16-வது கட்டம்.

இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ஆதி.

துலிக்கிவரகாணலையோ மெட்டு.

1. காணேனடியின்னம்வர காவேரிநடுவாசன்
கஸ்தூரிறெங்கேசன் (கா)

2. மானேயெந்தன்நாதனடி மன்னர்புகழ்விநோதனடி
மாமலர்ப்பாதனடி மங்கைசேடியேநீயிங்குவாடியே (கா)

3. பாவைமணவாளனடி பார்த்தனிடதோளனடி
பாருமல்மனம்தாளேனடி மங்கைசேடியேநீயிங்குவாடியே (கா)

4. சிங்காரதீரனடி செல்வசுகுமாறனடி
மங்களவொய்யாரனடி மங்கைசேடியேநீயிங்குவாடியே (கா)

5. சங்குசக்கரகையனடி சமுந்திரசையனனடி
சிங்கரூபமெய்யனடி மங்கைசேடியேநீயிங்குவாடியே

இந்திரசபா.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கத்திகத்தியழுது மெட்டு.

1. கருடனையும்தானழைத்து கன்னிகையாண்டாள்
காதலுடனேபுகழ்ந்து பங்குமேநின்றான்

இட்சணத்தில்யேகமாய்சென்று றெங்கருசனே
பட்சிராஜனே அழைத்துவாரும்நேசனே

2. காத்திருப்பேன்நானுமிங்கு கருணைதயாளா
காத்துவேகமாகபோவீர் வினுதையின்பாலா
வேண்டியேஆண்டாள் சொல்கேட்டுவேகமாய்தாசன்
தாண்டியேசிரங்கநகரும் அடைந்துபட்சிராஜன்

3. எங்கும்புகழ்றெங்கநாதன் யிணையடிபோற்றி
அங்குஆண்டாள்வாய்மொழியை அன்புடன்சாற்றி
காத்திருக்காள்வாருமையா கன்னியர்கோதை
கார்வண்ணனேநீரேரும் தோளிலிப்போதே

18-வது கட்டம்.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

கங்கதறணு மெட்டு.

1. வைணதேயரும்வந்தார்கெருடன்
மேல்சிந்தைமகிழ்ந்து
சையணத்தைவிட்டுசிறங்கேசனும்
சல்தியிலேபுகழ்ந்து

2. பக்தர்கள்யாவரும்கண்டுமகிழ்ந்தார்
பால்கடல்சையணனே
தக்கதோமென அஷ்டவாத்தியமுளங்க
தானழைத்தார் அந்தணர்

3. ஆண்டாளின்மணவாளர்யிவரென
அனைவருமகிழ்ந்திருந்தார்
அந்தணர்வேதமோதியேவேண்டியே
அன்புடனேபுகழ்ந்தார்

4. சூடிகொடுத்தாளுக்குநாளைமணமென
சூழ்ந்துமுகூர்த்தம்வைத்தார்
ஆடிபூறந்தன்னில்அவதரித்தகோதைக்கி
யனைவரும்தறங்கினந்தார்

19-வது கட்டம்.

இராகம்-இந்துஸ்தான்.

பலமகசிலோட்டிலேகோ மெட்டு.

அந்தமாய்சந்தோஷமாகிவாரார்
அரங்கநகர்வாசன்
ஆண்டாளைபாராய்யுன்பிராணேசன்

1. சிந்தைமகிழ்வதேநந்தவனமீதே
அந்தமுள்ளநேசன் — அம்மா
ஆண்டாளேபிராணேசன — (அந்த)

2. ஆனந்தஓய்யாறஅறவசையணதீரன்
தீனதயாளன் — கோதை
தேவிமணாளன் — (அந்)

3. சீறங்கவாசனடிசெல்வவிசுவாசனடி
பாறெங்கும்புகழ்ந்தவண்டி — வெகு
பாவலர்மகிழ்ந்தவண்டி — (அந்)

4. சாமளரூபனடிதையனுக்குமாரனடி
காமனைப்பெற்றவண்டி — இந்த
பூமகளுக்குற்றவண்டி — (அந்)

20-வது கட்டம்.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

நலுங்கிடகோபசலரூ என்ற மெட்டு.

1. செய்து கொள்ளுவாய் சிங்காரம் நீ
சீரங்கராஜர் வந்தார் இப்போது — (செய்)

2. அய்யன் மகிழ்ந்துமே மெய்யும் மலர்கறத்தால்
செய்ய கல்லியாணமே இப்போது — (செய்)

3- சம்பங்கிதையிலபூசு சதுர்விதமலர் சூடு
சரியானகொண்டைபோடு இப்போது (செய்)

4. கஸ்தூரி செங்கருன்னை கல்யாணமித்தினம்
காரிகையே செய்ய இப்போது (செய்)

5. சவுரிகொட்டை ருக்குடி சந்திரகட்டி படம்
சடைநாக சாத்திடுவாய் இப்போது (செய்)

6. கண்ணுக்குமையிடுவேன் கஸ்தூரிபொட்டிடுவேன்
கன்னியரும்நன்று இப்போது (செய்)

7 யேகஆபரணங்கள் யெண்ணம்போல்சாத்திடுவேன்
வேகமுடனேநானே இப்போது (செய்)

21-வது கட்டம்.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

சேடியே மதுரை மெட்டு.

1. அரும்புமலர்சிகை ஆண்டாளேமாதே
அழகாகசிர்ங்காரம் செய்தாரப்போதே

2. எங்குமேபெண்கள் யேகாந்தபாட
இசையுடன்மறையோதி பிராமணர்கூட

3. கொடியிடைமின்னல் கோதையப்போது
கொஞ்சியேஅன்னநடை நடந்துசபைமீது

4. அங்குள்ளமாதர்கள் அனைவரும்மகிழ்ந்து
அரங்கநகர்வோனை அன்புடன்புகழ்ந்து

22-வது கட்டம்.

இராகம்-நோட்டு-தாளம்-ஆதி.

வந்தனம்தந்தேன் நோட்டு மெட்டு.

சாத்திநாள்மாலே ஆண்டாளும்மாத்தினுள்மாலே
பாத்தியமுள்ளரெங்கராஜர் பார்வையுள்ளமார்பிலே
பாவையாள்தேவியாள் பானுமலர்கையினுல் சாத்தி

சிங்கரூபனே சீரங்கருஜனே
சீருய்பக்தர்கூரிவேதம் சிந்தித்துவாழ்த்தியே
சிற்சிலர்பர்பலர் சீதைகோதைகையினுல் சாத்தி

23-வது கட்டம்.

ஊஞ்சல்-இராகம்-பைரவி.

எங்கும்புகழ்புதுவையின்மாநகரின்மீதே
எழில்துளபமலர்வனத்தில்யுதித்த ஆண்டாள்
சங்குசகரர்றெங்க ருஜன்கூடமீதுஞ்சல்
அங்குமேஉட்காந்து ஆடிரூஞ்சல்
சங்கரனும்பார்வதியும் தனைத்தொட்டாட்ட
சதுர்முகனும் சரஸ்வதியும்கூடியாட்ட
திங்களும்பானும் வெண்சாமரைபோட
தேவியாண்டாள் றெங்கருடன் ஆடிரூஞ்சல்
நாரதரும்தும்புரரும் கீதம்பாடி
நன்மையுள்ளகெந்தருவர் இசைகள்கூட்டி
தீரமுள்ளஊர்வசியும் நடனமாடி
திருக்கோதைறெங்கருடன் ஆடிரூஞ்சல்
மதுரகவியுடனே பதின்மார்ஆழ்வார்
மகிழபல்லாண்டு பாடபட்டாபிரூனும்
அதுவிதயெதிருஜர் பின்னுன ஆண்டாள்
அரங்கநகர்முகுந்தனேடு ஆடிரூஞ்சல்

24-வது கட்டம்.

லாவிராகம்-எதுகுலகாம்போதி.

1. பூரநட்சத்திரம்ஆடிமாதத்திலே புஷ்பபவனத்தில்வந்தகோதை
சீரங்கருஜருடன்யாடிஊஞ்சல் சிங்காரகோதைலாவிலாவி

2 பட்டாபிருன்முன்னே பாடிப்பாமாலேதந்த
கட்டழகிறெங்கருடன் ஆடிஊஞ்சல்கோதை லாவிலாவி

25-வது கட்டம்

லாவி ராகம்-எதுக்குலகாம்போதி.

நாராயணசித்தர்புத்திரிநளினமலர்சேடிமித்திரி லாவிலாவி யந்த
சீரங்காராஜருடன்பத்தினிசெயுல்வேணுலாவிலாவி
ஆண்டாளேநன்மணிஅதிமுகவதனிலாவிலாவி
கொண்டாடியவிஸ்வாசிகோரும்சாமளமேனியர்நேசி லாவிலாவி

26-வது கட்டம்.

லாவி ராகம்-தோடி.

1. டோலேஆடினுள் ஆண்டாள்! லாவிபாடினுள்
வேலேசயண ஆதிமூலத்தை வீட்சணியமாய்பார்த்து ஆண்டாள்

2. வேளேயிதுவேபரிகாசமாய், வேணபாங்கியருடன்
தாளேகுணிந்துதோடிருகம் தன்னிலேஉனனிதமா

27-வது கட்டம்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

வேதமனதிசா மெட்டு.

144240.
Q25:417
M14

ஆண்டாளுடனேறெங்கர் யானந்தமாகியே
அறவசையணமீது தானிருந்தார்

1. வேண்டியேமறையவர் வேதங்கள்படிக்க
விண்ணுள்ளமாதர்கள் வெகுவாகநடிக்க
காண்டிபன்துணேவனே காலதுபிடிக்க
காதுக்குஇனிமையாய் மேளங்கள்யடிக்க

2. இந்திரன்யெச்சரிக்கை யிசையுடன்பாடவே
யேகமாய்மாதர்கள் மங்களம்சொல்லிடவே
அந்தரவாசிகள்யாவருங் கொண்டாடவே
அருந்தவமுனிவர் அங்குமேநாடவே

3. அஷ்டலெட்சுமியின் யுருவெனபோத்திட
அழகில்யிவளென யனவரும்மதித்திட
துஷ்டர்கள்யாவரும் துலேந்தாறெனசாத்திட
தோகையும்கோதையர் சேவடியேத்திட

4. துளபமலர்வனத்தில் தோன்றியேயுதிக்க
துரிதமாய்பெரியாழ்வார் தூக்கியேமதிக்க
களபகஸ்தூரி சந்தனத்துடன் துதிக்க
கன்னியாண்டாளே பாக்கியவதியெனமதிக்க

28-வது கட்டம்.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

சாமிநான்காதல்கொண்டே மெட்டு.

சாத்தினார்யாண்டாளுக்கு சாமிரெங்கர்மாங்கிலியம்
யேத்தியேயெல்லோரும் புகழவேதான்

1. ஓமம்வளத்துவேதியர் ஓதவேவேதங்களை
நேமமுடன்முளங்கவேதான்

2. விண்ணில்தேவர்கள்கூடி வெகுவாய்கீதம்பாடி
கன்னியர்கள் மிகவேஆடி

3. முனிவர்களும்துதிக்க முகுந்தன்மனம்களிக்க
முந்திபூமாரி பொழியவே

4. பல்லாண்டுதான்பாடி பட்டாபிராமனும்நாடி
யெல்லாரும்கூடினார் கோடி

29-வது கட்டம்.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோடானகோடியே ஆனந்தம்—நம் கோதைகல்யாணம் பிர்மாநந்தம்

அநுபல்லவி.

நாடெல்லாம்மிகவிளங்கி நன்மையும்மிகசெழிக்க

சரணம்.

1. நாரதர்தும்புரர் நல்மொழிபாடினார் வெகு
ஆரணமுனிவர்கள் அப்போகொண்டாடினார்
பூரணமாய்மாதர் புகழ்ந்துமேஆடினார்

2. வாத்தியம்பதிருை யங்குமுளங்கினர் பெரியாழ்வார்
பத்தியமுடனே தாம்பூலம்வழங்கினர்
நேத்தியாய்பெண்களும் மங்களம்விளங்கினர்

30-வது கட்டம்.

லெட்சுமிகல்யாணமே மெட்டு.

1. கோதைகல்லியாணமே கூருவைபோகமே

கோருவர்க்குயருள்புரிய குவலயத்தில்யவதரித்தாள்
கோமான்றெங்கருஜரவர் கூடிடவேதானுதித்தாள்

2. பெரியாழ்வார்சந்தோஷிக்க பெரியநந்தவனத்தில்வந்தாள்
அரியதிருப்பாவைபாடி அனுதினமும்தான் துதித்தாள்

31-வது கட்டம்.

யிகநேமேமந்துனே மெட்டு

நலுங்கிடுகிறேன்வாருய் நாகசயனுநாதாயிவ்வேளை நலுங்

1. நானழைத்தேன்போதே நாயகிதான்சாமி
நாடிவாமாயா யென்னேயா இவ்வேளை நலுங்

2. கருணாகரமித்திரா காத்தருள்சீரங்கா
கண்ணாளாமணாளா குணாளாயிவ்வேளை நலுங்

32-வது கட்டம்.

நகுமோமு கனலேனி மெட்டு.

நான்மகிழ்வாய்நலுங்கிடுவேனே யென்நாதா
நாயகாயென்மாரு யுன்னேரு தாமோதரு நான்

தினம்விடாதொழும்படியாரை கார்க்கும்சீதரனே
தேவிநான்மேவிஆவிக்குகந்த நாருயணனே நான்

அட்சதையும்பருப்பும் பச்சைமஞ்சள்தேடிவைத்தார்
அன்புடனேசந்தனம்பன்னீர் புஷ்பமும்வைத்தார்

யுச்சிதங்கள்காண மண்டபத்தில்குந்திருந்தார்
அரியேகரிமுன்வந்த முறகரிசமையறெங்கேசா நான்

33-வது கட்டம்.

வடிவேல் முருகையனே மெட்டு.

பூசிகந்தமும்பன்னீர் பூவையும்நின்ருள்
பேசியேஆண்டாளும் பிரியமணம்வாசிக்க பூசி

1. பரிமளமிகுந்தபாங்குடனே றெங்கருக்கு
அரிமையாய்றெங்கஸ்தலம் ஐயனுக்கும்கையால் பூசி

2. கதர்பச்சைரோஜா காணபன்னீரில்நனைத்து
விதவிதமாய்சாத்தி வேண்டிமுன்னேநின்று பூசி

34-வது கட்டம்.

நோட்டு-ராகம்.

வெண்சாமரைவீசுருள்ஆண்டாள் வெகுவாய்மாருதம்போலவே
கணங்கள்யறக்கண்பார்வையும் கஸ்தூரிறெங்கருக்கு வெண்

செங்கைதனில்விசிரிகொண்டு கங்கணஒளிகள்மின்ன
மங்களகறத்துடனேறெங்கநாதருக்குமுன்னல்

35-வது கட்டம்

இராகம்-நோட்டு-தாளம்-ஆதி

வாசுதேவனே மெட்டு.

1. அன்புடன்குடை ஆண்டாள்பிடிக்கிருள் ஆண்டாள்பிடிக்கிருள்
திருப்பாவைபடிக்கிருள் அருமையாகவேபூவொடு அன்புடன்

2. அண்டமுண்டோர்க்கும் வைகுண்டநாதருக்கும்
தாண்டாமரைகையினல் பூவொடு அன்

36-வது கட்டம்.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி. ஆவலாபாவால மெட்டு.

1. நிலகண்ணுடிபாரும் றெங்கநாதா முகில்
நீர்வர்ணமேனி மலர்பாதா நில

2. அண்டமுண்டவாயா தொண்டருக்குபாயா
ஆண்டாள்எனக்குநேயா பாரும் அழகியகோதைகறந்தனைநீரும்

3. ஆவிக்கிமாரு அமரர் துயர்தீரு அடியாள்கோதையர்நேரு பாரும்
ஆண்டாள்யென்கைய்முன்சீரு நில

சென்னை-600 008.

37-வது கட்டம்.

பத்தியம். இராகம்-ஆனந்தபைரவி.

பால்கடல்சையனனே மால்றெங்கேசனே
பாவையென்பாசனே பன்னிருநாமனே
பக்தியாய்நான்வந்து பாமாலைதிருப்பாவையும்
பாடியேயுனைகாண வெண்ணம்கொண்டேன்
பார்தனிலேசகிமாருடனே உனைத்தேடி
பணிந்திடநாடினேன் பன்னகசையனு
பரிவாகயுனைநானும் மணமாலைசூடவே
பரிந்துமார்கழி நோம்புதானிருந்தேன்
பஞ்சாயுதாநான் யுனைநினைந்தேன்
பதிதேடிமாமலர் கொண்டுவந்தேன்
பார்க்கவேநீர்மகிழ மனமகிழ்ந்தேன்
பற்றிடும்தாம்பூலம் பணிந்துநின்றேன்.

38-வது கட்டம்.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி. தனவாரிமெட்டு.

றெங்கநாதாஜெயமங்களம் யுன்னை
சங்கரன்அயன்புகழ்வார் குதோகுலம்
எங்கும்நிறைமேலா யிச்சித்தோர்பரிபாலா
மங்கைகோதைமணாளா மதகரிமுன்மூலா

39-வது கட்டம்.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

கெவுரி துயனகிங்குமா மெட்டு.

1. அம்மணிநலுங்கிடுகிறேன் ஆண்டாளேமாதே (அம்ம)
நம்மையாகவேயுந்தன்பாதத்தில் நல்லமஞ்சள்பூசிபுகழ்சொல்லி

2. திலதமிடுகிறேன் திவ்வியமலரோடு
திருமணசந்தணம்பூசி யொருமனதாய்

40-வது கட்டம்.

ஓடம்-இராகம்-புன்னாகவராளி-தாளம்-சாப்பு.

பாருலகம்தான்மகிழும் நல்ல பாம்புமிசைசையணித்திடும்
கோரும்வசம்ஆழ்வார்க்குதந்த பெரிய கோவில்ரங்கன்சந்நிதிமுன்

முடுக்கு. முப்பத்திறெண்டு தருமங்கள்சேர்த்து
முன்னே பலகையாக சொப்பனிட்டு
தொண்ணுத்தியாரு தத்துவமெல்லாம்
தோணதொருபாய் மறமாககட்டி
வேதங்கள்நாலேயும்நங்கூறமாக்கி
விதமானமந்திரம் கொடியாகநாட்டி
கலைக்கானம் அருபத்திநாலுமேசேர்த்து
கப்பலுக்குமிக ஆணியாய்தைய்த்து
புறாண ஆகமங்களை கயிறுககட்டி
புகழவேதத்துவத்தை பீறங்கியாக்கி
குருகைமாறக்கவாசி யதர்க்கெஜமானக்கி
குணமானபிறபந்தம் நாலாயிரந்தன்னை
புகழவேஞானத்தை கப்பலாக்கி
புண்ணியவான்களவர் யேசினேறைறசொலவேன்
மதுறகவிமகிழ்மாரன் மழுமிசைபாணன்
மலர்தாளன்பொய்கைபூத பேயாழ்வார்
மங்கைமன்னசேறனுட பக்தாடிபொடியார்
மகிழ்பெரியாழ்வாரும் பாகவதர்கூட
கோதையரும்றெங்கருஜர் கூடவேயேரி
கொண்டாடிஅந்தணர்கள்ஜெய மங்களம்பாடி
தருணமேகருணையெனும் பெரியகடல்தாண்டி
தான்வந்துதையா சீறங்கம்கப்பல்.
தண்டுனபம்கொண்டதோள அண்டர்தொழுவுருவே
யெண்டிசையோர்கொண்டிடும்வெண்டாமறைமகள்நாதா
ஏலேலோ ஏலேலோ முகுந்தா
ஏலேலோ ஏலேலோ

41-வது கட்டம்.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

ஆப்பிரியநினு மெட்டு.

ஆண்டாளின்மணவாளனே ஐயனே சுபமங்களம்
தாசவிசுவாசனேநேசனே ஜெயமங்களம்
வாசவர்முதல்பேசிடுமறைவாளனே சுபமங்களம்
பூரநட்சத்திரமாடிமாதமுதித்த மங்கைமேல்
சிரங்கம்விட்டுவந்துமணம்செய்த அரியே மங்களம்
ஏமன்வாதையை ரூமனெனசொல்ல
இல்லாமல்செய்வோனே மங்களம்
தாமதமில்லாமல்கனகவல்லிசொல்லே மங்களம்
மங்களம்ஜெயமங்களம் மங்களம்சுபமங்களம்
மங்களம்சூரியவேல்மகிழ் புகழவே மங்களம்

42-வது கட்டம்

144240.

ரெங்கநாதர் வாழ்த்து

025.4017 N49

இநதுஸ்தான் தாளம் ரூபகம். தாஜருஜ மெட்டு.

அவனிமிசைபுவனமகிழும் அரங்கநகரே
ஆனவில்லிபுத்தூர்பெரியஆழ்வார் யருமைமகளே
ஆண்டாளெனும்கோதையெனும் அருமலர்சூடியெனும்
அபூவிதயுன்னிதநாமங்கள்வைத்து யாதரித்துவந்தார்
அனேகயாழ்வார் மிகபுகழ்ந்துபாடும்
அறவசையனன்றெங்கன் ஆண்டாள்பரிணயமேஅங்கம்
அரிவையர்சொல்லெங்கும் எங்கும் அவ

ஆண்டாள்திருவடிகளே சரணம்.

கோதைகல்யாணம்முற்றிற்று.

[stamp]